தமிழ் TAMIL TAMOUL

# 2006 மக்கள் தொகை கணிப்பு வினாக்கள்

## கேள்வி கேட்கும் காரணங்கள்

Statistics Canada Statistique Canada

Canada

# முகவுரை

கனடாவின் அடுத்த மக்கள் தொகை கணிப்பு 2006 மே 16ம் திகதி இடம்பெறும். ஒரு நாட்டவர் என்ற வகையில் நாம் யார், நாங்கள் வாழும் சமூகங்கள் எத்தகையவை என்பன பற்றிய புள்ளிவிபரங்களை இம்மக்கள் தொகை கணிப்பு 300 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வருகிறது. மே 16ம் திகதி திரட்டப்படும் புள்ளிவிபரங்களை சமூகக் குழுமங்கள், தொழிலகங்கள், அரசாங்கங்கள் என்பன கல்வி, பயிற்சி, புதிய உற்பத்திப் பொருட்கள், சேவைகள், முதியோர் வாழ்விடங்கள், சுகாதார பராமரிப்புச் சேவைகள் மற்றும் எங்கள் அனைவருக்கும் முக்கியமான பல்வேறு திட்டங்களை வகுப்பதற்குப் பயன்படுத்தும்.

மக்கள் தொகை கணிப்பு வினாக்கொத்தை முதன்முதல் 2006ம் ஆண்டிலேயே இணைய மூலம் அல்லது கடுதாசியில் நிரப்ப வகை செய்யப்படுகிறது.

## பாகம் 1

இச்சிற்றேட்டின் முதற் பாகத்தில் 53 வினாக்கள் காணப்படுகின்றன. இவை 2006ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணிப்புக்குரிய நீண்ட வினாக்கொத்தில் இடம்பெற்றுள்ளன. 20% மக்கள் இவற்றை நிரப்புவார்கள். குறு வினாக்கொத்தில் 8 வினாக்கள் காணப்படுகின்றன – அவற்றுள் முதல் ஆறும், 16 முதல் 53 வரையான வினாக்களும் நீண்ட வினாக்கொத்தில் காணப்படுபவை.

## பாகம் 2

கனடா புள்ளிவிபரவியல் அலுவலகம் இவ்வினாக்களைக் கேட்கும் காரணங்கள் 2ம் பாகத்தில் காணப்படுகின்றன. அவ்வினாக்களின் மூலம் கேட்கப்படும் தரவுகள் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

2006ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணிப்பு அல்லது அத்துடன் நிகழும் கமத்தொழில் கணிப்புக் குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், உங்களுக்கு மிகவும் அண்மையிலுள்ள கனடா புள்ளிவிபரவியல் அலுவலகத்தை அழைக்கவும் அல்லது அதற்கு ஒரு கடிதம் அனுப்பவும். பின்வரும் பக்கத்தில் முகவரிகளும் தொலைபேசி இலக்கங்களும் காணப்படுகின்றன.

# பாகம் 1

## 2006 மக்கள் தொகை கணிப்பு வினாக்கள்

# 2006 மக்கள் தொகை கணிப்பு வினாக்கள்

**படி அ**

**நிரப்பிய பின்னர் அந்தரங்கமானது**

**2.** **உங்கள் தொலைபேசி இலக்கத்தைப் பிரித்தெழுதவும்:**

தொலைபேசி வட்டாரக் குறியீடு ____________ தொலைபேசி இலக்கம் ____________ ____________

**3.** **மேலே விலாசத்துக்குரிய வெற்றிடத்தில் பிரித்தெழுதப்பட்ட விலாசம் இல்லாவிட்டால் அல்லது 2006 மே 16ம் திகதி நீங்கள் வேறொரு விலாசத்தில் வசித்திருந்தால், இப்பிரிவை நிரப்பவும்.**

இல., வீதி அல்லது காணியும் உடைமையும் ____________ அக இல. ____________

மாநகரம், பட்டணம், நகரம், கிராமம், இந்தியர் புகலிடம் ____________ மாகாணம்/ ஆள்புலம் ____________

அஞ்சல் குறியீடு ________ ________

1. **படி ஆ-வில் யார் யாரை உள்ளடக்குவது?**

- **இந்த விலாசத்தில் வழக்கமாக வசிப்பவர்கள் அனைவரையும்,** புதிதாகப் பிறந்த குழந்தைகளையும், அறைக் கூட்டாளிகளையும் உள்ளடக்கவும்;
- **மாணவர்கள்:** வேறு இடத்தில் கல்வி பயின்றாலும், கோடை காலத்தில் வேலை செய்தாலும் குறித்த ஆண்டில் திரும்பிவந்து தமது பெற்றோருடன் வசிக்கும் மாணவர்களை அவர்களுடைய பெற்றோரின் விலாசத்தில் உள்ளடக்க வேண்டும்;
- **கூட்டுப் பராமரிப்பிலுள்ள பிள்ளைகள்:** பெரிதும் இங்கே வசிப்பவர்கள். தாயுடனும் பிதாவுடனும் சமமான காலம் வசிக்கும் பிள்ளைகள் 2006 மே 16ம் திகதி எந்தப் பெற்றாருடன் தங்கி இருக்கிறார்களோ அந்தப் பெற்றாரின் விலாசத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்;
- **வேறு இடத்தில் வசிக்கும் துணைவர் அல்லது மணம் புரியாது கூடி வாழ்பவர்:** வேலை, கல்வி கருதி வேறு இடத்தில் வசிப்பவர். ஆனால் காலாகாலம் இங்கு திரும்பி வருபவர்;
- **வதிவுரிமைபெற்ற குடிவரவாளரகள்:** இந்த விலாசத்தில் வழக்கமாக வசித்து வருபவர்கள்;
- **அகதிநிலை** கோருவோர், அவர்களுடன் இங்கு வசிக்கும் குடும்பத்தவர்கள்;
- **இன்னொரு நாட்டிலிருந்து இங்கு வேலை செய்வதற்கு அல்லது கல்வி கற்பதற்கு அனுமதி பெற்று வந்தவர்கள்,** அவர்களுடன் இங்கு வசிக்கும் குடும்பத்தவர்கள்;
- இங்கு வழக்கமாக **வசித்து வருபவர்கள்.** ஆனால் தறபொழுது **ஒரு நிலையத்தில் உள்ளவர்கள்** (வயோதிபர் அகம், வைத்தியசாலை, சிறைச்சாலை போன்ற) ஒரு நிலையத்தில் **ஆறு மாதங்களுக்கு மேற்படாது தங்கி இருப்பவர்கள்.**
- 2006 மே 15ம் திகதி இங்கு தங்கி **இருப்பவர்கள்.** அதேவேளை **வேறு வாடிக்கையான வசிப்பிடம் அற்றவர்கள்**

2. **படி ஆ-வில் பின்வருவோரை உள்ளடக்க வேண்டாம்:**

- **கனடாவில் வழக்கமாக வேறொரு விலாசத்தில் வசிப்பவராகவும்,** இங்கே தற்காலிகமாக வசிப்பவராகவும் உள்ளவர்கள் (எ-கா: விருந்தினர் அல்லது இந்த இடத்தை இரண்டாந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்கள்).
- கனடாவுக்கு **விருந்தினராக** வந்திருக்கும் வேறொரு நாட்டவர் (எ-கா: தனது தொழில் அல்லது விடுமுறை கருதி வந்திருப்பவர்.
- பிற நாட்டு அரச பிரதிநிதிகள், அவர்களுடைய குடும்பத்தவரகள்.

3. **படி ஆ-வில் உள்ளடக்க ஒருவரும் இல்லை என்றால**

○ 2006 மே 16ம் திகதி இந்த விலாசத்தில் தங்கி இருப்பவர்கள் **அனைவரும்** கனடாவில் வழக்கமாக வேறோர் இடத்தில் வசிப்பவர்கள் அல்லது பிறநாட்டு விருந்தினர்கள், அல்லது அரச பிரதிநிதிகள் என்றால், இந்த வட்டத்தில் குறியிடவும்.

→ உங்கள் பெயரையும் வழக்கமான தொலைபேசி இலக்கத்தையும் கீழே பிரித்தெழுதவும். இந்த வினாக்கொத்தை நிரப்ப வேண்டாம். தபால் கட்டணம் செலுத்தப்பட்டு உங்களுக்கு அனுப்பப் பட்டுள்ள தபால் உறையில் இட்டு அனுப்பவும்.

→ குடும்பப் பெயர ______________________ சொந்தப் பெயர் ______________________

→ தொலைபேசி வட்டாரக் குறியீடு ______________________ தொலைபேசி இலக்கம் ________ ________

## படி ஆ

1. **2006 மே 16ம் திகதி அளவில் நீங்கள் உட்பட இந்த விலாசத்தில் வழக்கமாக எத்தனை பேர் வசித்து வந்தார்கள்?** *இந்த விலாசத்தில் வசித்து வருபவர்கள் தற்காலிகமாக வேறிடத்தில் தங்கி இருந்தாலும், அவர்கள் அனைவரையும் உள்ளடக்கவும்*

__________

2. **நீங்கள் உட்பட இங்கு வழக்கமாக வசித்து வருபவர்கள் அனைவரின் பெயர்களையும் கீழே பிரித்தெழுதவும்.** *முதலில் வயதுவந்த ஒருவரைப் பதியவும். அடுத்து இங்கு வழக்கமாக வசிக்கும் அவருடைய துணைவரையும் அல்லது மணம்புரியாது கூடிவாழ்பவரையும் பிள்ளைகளையும் பதிவது பொருத்தமாயின் பதியவும். தொடர்ந்து வழக்கமாக இங்கு வசித்துவரும் பிறர் அனைவயையும் பதியவும்.*

| | குடும்பப் பெயர் | சொந்தப் பெயர் |
|---|---|---|
| **ஆள் 1** | | |
| **ஆள 2** | | |
| **ஆள 3** | | |
| **ஆள 4** | | |
| **ஆள 5** | | |
| **ஆள 6** | | |
| **ஆள 7** | | |
| **ஆள 8** | | |
| **ஆள 9** | | |
| **ஆள 10** | | |

## படி இ

**படி ஆ-வில் உள்ளடக்க வேண்டுமா என்பது உறுதியாகத் தெரியாத படியால் எவரையாவது உள்ளடக்கவில்லையா?**

*எடுத்துக்காட்டு:*

- *வேறோர் அகம் உடையவராய் இருந்தும் இந்த விலாசத்தில் வசிப்பவர்.*
- *தற்காலிகமாக வேறிடம் சென்றிருப்பவர்*

❍ இல்லை

❍ ஆம் ➔ பெயர், உறவு, காரணம் என்பவற்றைக் குறிப்பிடுக.

பெயர்(கள்) ______________________________

______________________________

உறவு/ ______________________________

காரணம் ______________________________

---

## படி ஈ

1. **படி ஆ-வில் உள்ளடக்கப்பட்டவர் எவரும் விற்பனைக்கென ஆகக் குறைந்தது ஒரு பொருளையாவது உற்பத்திசெய்யும் பண்ணை இயக்குநரா?** (பயிர், கால்நடை, பால், வளர்ப்புப் பறவை, முட்டை, பமையக அல்லது நாற்றங்கால் ஆக்கம், நத்தார் மரம், புற்பாளம், தேன், மேப்பிள் தேறல், உரோம வகைகள் முதலியவை)

   ❍ இல்லை ➔ **படி உ-வுக்குச் செல்லவும**

   ❍ ஆம்

2. **இப்பண்ணை இயக்குநர் இப்பண்ணையை நிர்வகிப்பது குறித்து அன்றாடம் முடிபுகள் எடுப்பவரா?**

   ❍ இல்லை

   ❍ ஆம்

---

## படி உ

**படி ஆ-வில் 1ம் வினாவுக்குரிய பெயர்களை 4ம் பக்கத்தின் உச்சத்தில் இடவும்.**
**அதே ஒழுங்கில் இடவும்.**

---

**1.** **பெயர்**

**படி ஆ-வில் உள்ள பெயர்களை அதே ஒழுங்கில் இங்கு தரப்பட்ட வெற்றிடத்தில் இடுக. அப்புறம் ஒவ்வொருவரையும் குறித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**ஆள் 1**

குடும்பப் பெயர்

____________________________________

சொந்தப் பெயர

____________________________________

---

**2.** பால

- ❍ ஆண்
- ❍ பெண

---

**3.** **பிறந்த திகதி**

| | திகதி | மாதம | ஆண்டு |
|---|---|---|---|
| *எடுத்துக்காட்டு:* | ***1 3*** | ***0 2*** | ***1 9 5 0*** |

*சரியான திகதி தெரியாவிட்டால், அண்ணளவாக நிரப்பவும்.*

பிறந்த திகதி:

| திகதி | மாதம | ஆண்டு |
|---|---|---|
| ________ | ________ | ____________ |

---

**4.** **மண உறவு**

*ஒரு வட்டத்துள் மட்டும் "X" புள்ளடி இடுக.*

- ❍ சட்டப்படி திருமணமே ஆகாதவர் (தனி ஆள்)
- ❍ சட்டப்படி மணமானவர் (அத்துடன் பிரிந்திராதவர்)
- ❍ சட்டப்படி மணம் புரிந்த நிலையிலும் பிரிந்திருப்பவர
- ❍ மணவிலக்குப் பெற்றவர்
- ❍ துணைவரை இழந்தவர

---

**5.** **இவர் மணம்புரியாத ஒரு துணைவருடன் கூடி வாழ்பவரா?**

*ஏதிர் பாலார் அல்லது ஒரே பாலார் இருவர் ஒருவரை ஒருவர் சட்டப்படி மணம்புரியாது தம்பதிகளாகக் கூடிவாழ்வோர் என்றால், அவர்களே **மணம்புரியாது கூடிவாழ்வோர்.***

- ❍ ஆம்
- ❍ இல்லை

---

## 6. 1-ம் ஆளின் உறவினர்

இங்கு வழக்கமாக வசிக்கும் **ஒவ்வொருவரும்** 1-ம் ஆளுக்கு என்ன வகையில் உறவினர் என்பதை விபரிக்க.

*ஒரு "x" புள்ளடியை அல்லது ஒரு விடையை மட்டும் இடுக.*

*மாற்றார் பிள்ளைகள், தத்தெடுத்த பிள்ளைகள், மணம்புரியாது கூடிவாழும் துணைவரின் பிள்ளைகள் சொந்தப் பிள்ளை களாகவே கணிக்கப்பட வேண்டும்.*

*ஒரு வகையும் பொருந்தாவிடத்து "வேறு" கூட்டைப் பாவித்து சம்பந்தப்பட்டவர் 1-ம் ஆளுக்கு என்ன வகையில் உறவினர் என்பதைச் சுட்டிக்காட்டுக.*

*1-ம் ஆளின் வேறு உறவினருக்கு எடுத்துகாட்டுகள்:*

- *ஒன்றுவிட்ட சகோதரன் அல்லது சகோதரி*
- *உடன்பிறந்தாரின் மகன் அல்லது மகள்*
- *வாடகை அறையாளரின் கணவர் அல்லது மனைவி*
- *அறைக் கூட்டாளியின் மகன் அல்லது மகள்*
- *பணியாளர்*
- *திருமணமான ஒரேபால் துணைவர்*

### ஆள் 1

❍ **ஆள் 1**

### ஆள் 2

❍ 1-ம் ஆளின் கணவர் அல்லது மனைவி
❍ 1-ம் ஆளுடன் மணம் புரியாது கூடிவாழும் எதிர்பால் துணைவர
❍ 1-ம் ஆளுடன் மணம் புரியாது கூடிவாழும் ஒரேபால் துணைவர்
❍ 1-ம் ஆளின் மகன் அல்லது மகள
❍ 1-ம் ஆளின் மருமகன் அல்லது மருமகள
❍ 1-ம் ஆளின் பேரப்பிள்ளை
❍ 1-ம் ஆளின் தந்தையார் அல்லது தாயார
❍ 1-ம் ஆளின் மாமனார் அல்லது மாமியார
❍ 1-ம் ஆளின் பாட்டன் அல்லது பாட்டி
❍ 1-ம் ஆளின் சகோதரன் அல்லது சகோதரி
❍ 1-ம் ஆளின் மைத்துனர் அல்லது மைத்துனி
❍ வாடகை அறையாளர்/வாடகை விருந்தினர்
❍ அறைக் கூட்டாளி

வேறு – சுட்டிக்காட்டுக

____________________________________

____________________________________

## அன்றாட உடல் இயக்கங்கள

**7.** கேள்வி, பார்வை, பேச்சு, நடை, படி ஏறுதல், குனிதல், படித்தல் மற்றும் இவை போன்றவற்றைச் செய்வதற்கு இவர் சிரமப்படுகின்றாரா?

- ❍ ஆம், சில வேளைகளில
- ❍ ஆம், அடிக்கடி
- ❍ இல்லை

---

**8.** உடல் நிலை **அல்லது** மன நிலை **அல்லது** உடல் நலப் பிரச்சனை காரணமாக இவர் ஆற்றும் **செயலின் அளவு அல்லது வகை குறைகிறதா?**

(அ) அகத்தில்

- ❍ ஆம், சில வேளைகளில
- ❍ ஆம், அடிக்கடி
- ❍ இல்லை

(ஆ) வேலைத் தலத்தில் அல்லது பள்ளிக்கூடத்தில

- ❍ ஆம், சில வேளைகளில
- ❍ ஆம், அடிக்கடி
- ❍ இல்லை
- ❍ பொருந்தாது

(c) வேறு செயல்கள், எடுத்துக்காட்டாக, போக்குவரத்து அல்லது பொழுதுபோக்கு

- ❍ ஆம், சில வேளைகளில
- ❍ ஆம், அடிக்கடி
- ❍ இல்லை

---

## சமூக பண்பாட்டு விபரங்கள்

**9.** இவர் எங்கே பிறந்தார்?

*தற்போதைய எல்லைகளின்படி ஒரு விடையை மட்டும் தருக.*

**கனடாவில் பிறந்தவர்**

- ❍ நியூபவுண்லாந்து, லெப்ரடோர்
- ❍ பிறின்ஸ் எட்வேட் தீவு
- ❍ நோவா ஸ்கோஷியா
- ❍ நியூ பிறவுண்ஸ்விக்
- ❍ குயூபெக்
- ❍ ஒன்ராறியோ
- ❍ மனிற்றோபா
- ❍ சஸ்கச்சுவான்
- ❍ அல்பேட்டா
- ❍ பிரிட்டிஷ் கொலம்பியா
- ❍ யூக்கன்
- ❍ வட-மேல் புலம்
- ❍ நுனவுற்

**பிறநாட்டில் பிறந்தவர்**

*நாட்டைக் குறிப்பிடுக*

______________________________

---

**10.** இவர் எந்த நாட்டுக் குடிமகன்?

***ஒன்றுக்கு மேற்பட்ட*** *குடியுரிமைகள் பொருந்துமாயின் சுட்டிக்காட்டுக.*

***"கனடா, குடியுரிமையினால்"*** *என்பது குடியுரிமைச் சட்டத்தின்படி ஒருவருக்கு கனடிய குடியுரிமை வழங்கப்படுவதைக் குறிக்கும்.*

❍ கனடா, பிறப்பபினால்

❍ கனடா, குடியுரிமையினால்

வேறு நாடு - குறிப்பிடுக

____________________________

---

**11.** இவர் தற்பொழுது **நிரந்தர குடிவரவாளராக** இருக்கின்றாரா அல்லது எப்பொழுதாவது அப்படி இருந்திருக்கின்றாரா?

*குடிவரவு அதிகாரிகளிடம் கனடாவில் நிரந்தரமாக வசிபபதற்கான உரிமையைப் பெற்றவரே* ***நிரந்தரக் குடிவரவாளர்*** *(நிரந்தர வாசி).*

❍ இல்லை ➔ **13-ம் வினாவுக்கு செல்க**

❍ ஆம்

---

**12.** இவர் எந்த ஆண்டில் நிரந்தர வதிவுரிமை பெற்றார்?

ஆண்டு ____________

*சரியான ஆண்டு தெரியாவிட்டால் அண்ணளவாக நிரப்பவும்*

---

**13.** இவரால் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் நன்கு உரையாட முடியுமா?

*ஒரு வட்டத்துள் மட்டும் "X" புள்ளடி இடுக.*

❍ ஆங்கிலத்தில் மட்டும

❍ பிரெஞ்சில் மட்டும

❍ ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும

❍ ஆங்கிலத்திலோ பிரெஞ்சிலோ முடியாது

---

**14.** **ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு தவிர** வேறு எந்த மொழியில் (மொழிகளில்) இவரால் நன்கு உரையாட முடியும்?

❍ பொருந்தாது

**அல்லது**

*வேறு மொழிகளைக் குறிப்பிடுக.*

______________________________________

______________________________________

---

**15.** (அ) இவர் வீட்டில் **மிகவும் அதிகம்** பேசும் மொழி எது?

- ❍ ஆங்கிலம்
- ❍ பிரெஞ்சு

வேறு — *குறிப்பிடுக*

______________________________

(ஆ) இவர் வீட்டில் வேறு மொழிகள் பேசும் **வழக்கம்** உண்டா?

- ❍ இல்லை
- ❍ ஆம், ஆங்கிலம
- ❍ ஆம், பிரெஞ்சு

ஆம், வேறு — *குறிப்பிடுக*

______________________________

---

**16.** இவர் முதலில் வீட்டில் **சிறுவயதில் கற்றதாகவும் இன்னும் புரிந்துகொள்வதாகவும்** உள்ள மொழி எது?

*தான் முதலில் கற்ற மொழி இவருக்கு இப்பொழுது புரியாதாயின், இவர் கற்ற இரண்டாவது மொழியைக் குறிப்பிடுக.*

- ❍ ஆங்கிலம்
- ❍ பிரெஞ்சு

வேறு — *குறிப்பிடுக*

______________________________

---

*கனடாவின் பல்லின மக்கள்தொகை மாறிவரும் கோலத்தைக் கண்ணுறும் நோக்குடன் அவர்களுடைய மூதாதையர் பற்றிய விபரங்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாகத் திரட்டப்பட்டு வந்துள்ளன.*

**17.** இவருடைய **மூதாதையர்** எந்த இனத்தவர் அல்லது பண்பாட்டினர்?

*ஒருவருடைய மூதாதையர், அவருடைய பாட்டன், பாட்டியருக்கு முற்பட்டவர் என்று கொள்ளப்படுவது வழக்கம்.*

*எடுத்துக்காட்டு: கனடியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், சீனர், இத்தாலியர், ஜேர்மனியர், ஸ்கொட்லாந்தியர், கிழக்கு இந்தியர், அயர்லாந்தியர், கிறீயர், மீ கிமாக்கியர் (மிக்மாக்கியர்), மேற்றியர், இனுவிற்றியர் (எஸ்கிமோவர்), உக்ரேனியர், இடச்சுக்காரர், பிலிப்பினோவர், போலாந்தியர், போர்த்துக்கேயர், யூதர், கிரேக்கர், ஜமைக்கர், வியற்நாமியர், லெபனானியர், சிலியர், சல்வடோறியர், சோமாலியர் முதலியோர்.*

*பொருந்தும் மூதாதையர் அனைவரையும் குறிப்பிடவும்.*

______________________________

______________________________

______________________________

______________________________

---

**18.** இவர் பழங்குடியினரா, அதாவது, வட அமெரிக்க இந்தியரா, மெயிற்றியரா, எஸ்கிமோவரா?

"ஆம்" ஆயின் இன்று இவரைச் செவ்வனே சித்தரிக்கும் வட்டத்துள் அல்லது வட்டங்களுள் "X" புள்ளடி இடுக.

- ❍ இல்லை ➔ **அடுத்த வினாவுக்குச் செல்க**
- ❍ ஆம், வட அமெரிக்க இந்தியர்
- ❍ ஆம், மெயிறிறயர்
- ❍ ஆம், இனுவிற்றர் (எஸ்கிமோவர்)

▶ **20-ம் வினாவுக்கு செல்க**

---

**19.** இவர் எந்த இனத்தவர்?

*பொருத்தமாயின் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களுள் "X" புள்ளடி இடுக அல்லது குறிப்பிடுக.*

*கனடிய சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வில் அனைவரும் பங்குறும் வாய்ப்பை மேம்படுத்தும் திட்டங்களை வகுப்பதற்காகவே இவ்விபரங்கள் திரட்டப்படுகின்றன.*

- ❍ வெள்ளையர்
- ❍ சீனர்
- ❍ தெற்கு ஆசியர் *(எ-கா: இந்தியர், பாகித்தானியர், இலங்கையர் முதலியோர்)*
- ❍ கறுப்பர்
- ❍ பிலிப்பைனியர்
- ❍ இலத்தீன் அமெரிக்கர
- ❍ தென் கிழக்கு ஆசியர் *(எ-கா: வியற்நாமியர், கம்போடியர், மலேசியர், இலாவோசியர் முதலியோர்)*
- ❍ அராபியர்
- ❍ மேற்கு ஆசியர் *(எ-கா: ஈரானியர், ஆவ்கானியர் முதலியோர்)*
- ❍ கொறியர
- ❍ யப்பானியர

வேறு - *குறிப்பிடுக.*

______________________________

---

**20.** இவர் ஓர் (வட அமெரிக்க) இந்தியப் பிரிவினரா/பழங் குடியினரா?

- ❍ இல்லை
- ❍ ஆம், ஓர் (வட அமெரிக்க) இந்தியப் பிரிவினர்/பழங் குடியினர

↓

*எந்த இந்தியப் பிரிவினர்/பழங் குடியினர் என்று சுட்டிக்காட்டுக (எடுத்துக்காட்டு: மஸ்குவீம்)*

______________________________

---

**21.** இவர் கனடிய *இந்தியர் சட்டத்தில்* வரையறுக்கப்பட்டவாறு ஒப்பந்த்துக்கு உட்பட்ட ஓர் (வட அமெரிக்க) இந்தியரா அல்லது பதிவுசெய்யப்பட்ட ஓர் (வட அமெரிக்க) இந்தியரா?

- ❍ இல்லை
- ❍ ஆம். ஒப்பந்தத்துக்கு உட்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட இந்தியர்

---

## பெயர்வு

**23.** இவர் 1 **ஆண்டுக்கு முன்னர்,** அதாவது, 2005 மே 16ம் திகதி எங்கே வசித்தார்?

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக.*
***குறிப்பு:***
*மூன்றாம் வட்டத்துள் புள்ளடி இடுவோர்:*
*நகரத்தை அல்லது மாநகரத்தை உள்ளடக்கிய பெரு நகரத்தின் பெயரைக் காட்டிலும் அந்நகரத்தின் அல்லது மாநகரத்தின் பெயரை இடுவதே சிறப்பு.*

*எடுத்துக்காட்டுகள்:*

- *விக்டோரியா (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் சானிச் என்பதே சிறப்பு;*
- *எட்மண்டன் (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் செயின்ற் அல்பேட் என்பதே சிறப்பு;*
- *மொன்றியல் (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் லவல் என்பதே சிறப்பு.*

- ❍ இப்பொழுது வசிக்கும் **அதே** விலாசத்தில் வசித்தார்.
- ❍ **அதே** மாநகரத்தில், நகரத்தில், கிராமத்தில், நகரில், பட்டணத்தில், இந்தியர் புகலிடத்தில் **வேறு** விலாசத்தில் வசித்தார்.
- ❍ **கனடாவில் வேறு** ஒரு மாநகரத்தில், நகரத்தில், கிராமத்தில், நகரில், பட்டணத்தில், இந்தியர் புகலிடத்தில் வசித்தார்.

↓

*பின்வருவனவற்றின் பெயரைச் சுட்டிக்காட்டுக:*

மாநகரம், நகரம், கிராமம், நகர், பட்டணம், இந்தியர் புகலிடம்.

______________________________

______________________________

மாகாணம்/ஆள்புலம

______________________________

அஞ்சல் குறியீடு

________   ________

- ❍ **கனடாவுக்கு வெளியே** வசித்தார்

↓

*நாட்டின் பெயரைக் குறிப்பிடுக:*

______________________________

---

**24.** இவர் **5 ஆண்டுகளுக்கு முன்னர்,** அதாவது **2001 மே 16**ம் திகதி எங்கே வசித்தார்.

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "x" புள்ளடி இடுக.*

***குறிப்பு:***

*மூன்றாம் வட்டத்துள் புள்ளடி இடுவோர்:*

*நகரத்தை அல்லது மாநகரத்தை உள்ளடக்கிய பெரு நகரத்தின் பெயரைக் காட்டிலும் அந்நகரத்தின் அல்லது மாநகரத்தின் பெயரை இடுவதே சிறப்பு.*

*எடுத்துக்காட்டுகள்:*

- *விக்டோரியா (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் சானிச் என்பதே சிறப்பு;*
- *எட்மண்டன் (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் செயின்ற் அல்பேட் என்பதே சிறப்பு;*
- *மொன்றியல் (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் லவல் என்பதே சிறப்பு.*

❍ இப்பொழுது வசிக்கும் **அதே** விலாசத்தில் வசித்தார்.

❍ **அதே** மாநகரத்தில், நகரத்தில், கிராமத்தில், நகரில், பட்டணத்தில், இந்தியர் புகலிடத்தில் **வேறு** விலாசத்தில் வசித்தார்.

❍ **கனடாவில் வேறு** ஒரு மாநகரத்தில், நகரத்தில், கிராமத்தில், நகரில், பட்டணத்தில், இந்தியர் புகலிடத்தில் வசித்தார்.

↓

*பின்வருவனவற்றின் பெயரைச் சுட்டிக்காட்டுக:*

மாநகரம், நகரம், கிராமம், நகர், பட்டணம், இந்தியர் புகலிடம்.

____________________

____________________

மாகாணம்/ஆள்புலம

____________________

அஞ்சல் குறியீடு

________ ________

❍ **கனடாவுக்கு வெளியே** வசித்தார்

↓

*நாட்டின் பெயரைக் குறிப்பிடுக:*

____________________

## பெற்றோர் பிறந்த இடம்

**25.** இவருடைய பெற்றோர் இருவரும் பிறந்த நாடு எது?

(அ) **தந்தை**

*புள்ளடி "x" இடுக அல்லது தற்போதைய எல்லைகளின்படி நாட்டைக் குறிப்பிடுக*

**தந்தை**

❍ கனடாவில் பிறந்தவர
கனடாவுக்கு வெளியே பிறந்தவர்

*நாட்டைக் குறிப்பிடுக:*

______________________________

(ஆ) **தாய**

*புள்ளடி "x" இடுக அல்லது தற்போதைய எல்லைகளின்படி நாட்டைக் குறிப்பிடுக*

**தாய**

❍ கனடாவில் பிறந்தவர்
கனடாவுக்கு வெளியே பிறந்தவர

*நாட்டைக் குறிப்பிடுக:*

______________________________

---

## கல்வி

**26.** இவர் ஓர் **இரண்டாந்தர (உயர்) பாடசாலையில்** கற்றுத் தேறிய தகுதிப்பத்திரம் அல்லது அதற்கு நிகரான தகுதிப்பத்திரம் பெற்றவரா?

*இரண்டாந்தர (உயர்) பாடசாலைத் தகுதிப்பத்திரத்துக்கு நிகரான சான்றிதழ்களுக்கு எடுத்துக்காட்டுகள்: பொதுக் கல்வி விருத்திச் சான்றிதழ் (புநுனு)இ வயது வந்தோர் அடிப்படைக் கல்விச் சான்றிதழ் (யுடீநு).*

**இரண்டாந்தர (உயர்) பாடசாலைத் தகுதிப்பத்திரம் அல்லது சான்றிதழ்**

❍ ஆம், இரண்டாந்தர (உயர்) பாடசாலைத் தகுதிப்பத்திரம்
❍ ஆம், இரண்டாந்தர (உயர்) பாடசாலைத் தகுதிப்பத்திரத்துக்கு நிகரான சான்றிதழ்
❍ இல்லை

---

**27.** இவர் ஒரு பதிவுற்ற தொழில்-தேர்ச்சி நெறியில் அல்லது வேறு தொழில்-தேர்ச்சி நெறியில் தேறிய சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம் பெற்றவரா?

*பொருந்தும் வட்டங்கள் அனைத்தையும் குறிக்கவும்.*

*எடுத்துக்காட்டு:*

- *சிகையலங்காரம*
- *சி.என்.சி.பொறிவலர்*

**பதிவுற்ற தொழில்-தேர்ச்சி நெறியில் அல்லது வேறு தொழில்-தேர்ச்சி நெறியில் தேறிய சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம**

❍ ஆம், பதிவுற்ற தொழில்-தேர்ச்சிச் சான்றிதழ்
❍ ஆம், வேறு தொழில்-தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ இல்லை.

---

**28.** இவர் ஒரு **கல்லூரி, சி.ஈ.ஜி.ஈ.பி. அல்லது வேறு பல்கலைக்கழகம்-சாராத** சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம் பெற்றவரா?

*பொருந்தும் வட்டங்கள் அனைத்தையும் குறிக்கவும்.*

*எடுத்துக்காட்டு:*

- *கணக்கீட்டுத் தொழினுட்பவியல்*
- *ஆதன முகவர்*
- *கைத்தொழில் எந்திரத் தொழினுட்பவியல்*

**கல்லூரி, சி.ஈ.ஜி.ஈ.பி. மற்றும் பிற பல்கலைக்கழகம்-சாராத சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்**

❍ ஆம், 3 மாதங்களுக்கு உட்பட்ட கல்விநெறிச் சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ ஆம், 3 மாதங்கள் முதல் 1 ஆண்டுக்கு உட்பட்ட கல்விநெறிச் சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ ஆம், 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் வரையான கல்விநெறிச் சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ ஆம், 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கல்விநெறிச் சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ இல்லை.

---

**29.** இவர் ஒரு **பல்கலைக்கழகத்தில்** கற்றுத் தேறிய பட்டம் அல்லது சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம் பெற்றவரா?

*பொருந்தும் வட்டங்கள் அனைத்தையும் குறிக்கவும்.*

**பல்கலைக்கழகப் பட்டம் அல்லது சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்**

❍ ஆம், இளமானித் தரத்துக்கு கீழ்ப்பட்ட சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ ஆம், இளமானிப் பட்டம் (எல்.எல்.பி. உட்பட)
❍ ஆம், இளமானித் தரத்துக்கு மேற்பட்ட சான்றிதழ் அல்லது தகுதிப்பத்திரம்
❍ ஆம், முதுமானிப் பட்டம்
❍ ஆம், மருத்துவவியல், பல்-மருத்துவ வியல், விலங்கு மருத்துவவியல், கண்பார்வை மருத்துவவியல் பட்டம்
❍ ஆம், ஈட்டிய கலாநிதிப் பட்டம்
❍ இல்லை

---

**30.** இவர் பெற்ற **உச்சப்** பட்டத்துக்குரிய அல்லது சான்றிதழுக்குரிய தகுதிப்பத்திரத்துக்குரிய சிறப்புக் கல்வித் துறை என்ன?

*குறிப்பிடவும். எடுத்துக்காட்டு:*

- *வாகனப் பொறிநுட்பவியல்*
- *அமைநுட்ப எந்திரவியல்*
- *பல்-மருத்துவத் தொழினுட்பவியல்*
- *வான்கலப் பொறிநுட்பவியல்*
- *மருத்துவ பரிசோதனைக்கூடத் தொழினுட்பவியல்*
- *பாலர் பராமரிப்பு*
- *கமத்தொழிற் பொருளியல்*
- *கணினி எந்திரத் தொழினுட்பவியல்*

**உச்சப் பட்டத்துக்குரிய அல்லது சான்றிதழுக்குரிய தகுதிப்பத்திரத்துக்குரிய சிறப்புக் கல்வித் துறை**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**அல்லது**

❍ (உயர் பாடசாலைக் கல்விக்கு மேற்பட்ட) சான்றிதழோ தராதரப்பத்திரமோ இல்லை. ▶ **32-ம் வினாவுக்கு செல்க**

---

**31.** இவர் எந்த மாகாணத்தில், ஆள்புலத்தில், நாட்டில் கற்றுத் தேறி தனது **உச்சப்** பட்டத்தை, சான்றிதழை, தகுதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார்?

**கனடாவில்**

*மாகாணத்தை அல்லது ஆள்புலத்தைக் குறிப்பிடவும்.*

________________________________________

**அல்லது**

**கனடாவுக்கு வெளியே**

*நாட்டைக் குறிப்பிடவும்.*

________________________________________

---

**32.** கடந்த ஒன்பது மாதங்களில் (அதாவது கடந்த செப்டெம்பர் மாதத்திலிருந்து) இவர் எப்பொழுதாவது பாடசாலை, கல்லூரி, சி.ஈ.ஜி.ஈ.பி., பல்கலைக்கழகம் சென்றுள்ளாரா?
*பொருந்தும் வட்டங்கள் அனைத்தையும் குறிக்கவும்.*

❍ ஆம், ஆரம்ப பாடசாலை, இளையோர் உயர் பாடசாலை, உயர் பாடசாலை சென்றுள்ளார்.

❍ ஆம், தொழில் தேர்ச்சிப் பாடசாலை, கல்லூரி, சி.ஈ.ஜி.ஈ.பி, பல்கலைக்கழகம்-அல்லாத கல்விக்கூடம் சென்றுள்ளார்.

❍ ஆம், பல்கலைக்கழகம் சென்றுள்ளார்.

❍ இல்லை, கடந்த ஒன்பது மாதங்களில் ஒருபொழுதும் பாடசாலை செல்ல வில்லை.

---

## வீட்டுக் காரியங்கள்

குறிப்பு:

***கடைசி வாரம்** என்பது 2006 மே 7 ஞாயிறு முதல் 13 சனி வரை ஆகும்.*

*33-ம் வினாவில் ஒவ்வொரு காரியத்திலும் செலவிட்ட நேரம் முழுவதையும் உள்ளடக்கவும். ஒரே நேரத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரியங்கள் இடம்பெற்றாலும் பரவாயில்லை.*

**33.** இவர் **கடந்த வாரம்** பின்வரும் காரியங்களில் எத்தனை மணித்தியாலங்கள் செலவிட்டார்?

(அ) இந்த வீட்டில் உள்ளவர்களுக்காக அல்லது பிறருக்காக **வருவாய் பெறாது** ஆற்றிய வீட்டு வேலை, வளவு வேலை, வீடு பழுதுபார்ப்பு.

*சில எடுத்துக்காட்டுகள்: உணவு தயாரித்தல், கார் கழுவுதல், சலவை, புல்லு வெட்டுதல், கடைக்குப் போய்வரல், வீட்டுத் திட்டமிடல் முதலியன.*

- ❍ பொருந்தாது
- ❍ 5 மணித்தியாலங்களிலும் குறைவு
- ❍ 5 முதல் 14 மணித்தியாலங்கள்
- ❍ 15 முதல் 29 மணித்தியாலங்கள்
- ❍ 30 முதல் 59 மணித்தியாலங்கள்
- ❍ 60 மணித்தியாலங்கள் அல்லது அதற்கும் அதிகம்

(ஆ) இவரின் சொந்தப் பிள்ளைகளுள் ஒன்றை அல்லது பலவற்றை, அல்லது பிறருடைய பிள்ளைகளை **வருவாய் பெறாது** கவனித்தல்.

*சில எடுத்துக்காட்டுகள்: பிள்ளைகளைக் குளிப்பாட்டல், பிள்ளைகளுடன் விளையாடுதல், பிள்ளைகளை விளையாட்டுக்கு எடுத்துச் செல்லல், வீட்டுப்பாடம் செய்வதற்கு உதவுதல், வளரிளம் பருவத்தினருடன் அவர்களுடைய பிரச்சனைகளைப் பற்றி உரையாடுதல் முதலியன.*

- ❍ பொருந்தாது
- ❍ 5 மணித்தியாலங்களிலும் குறைவு
- ❍ 5 முதல் 14 மணித்தியாலங்கள்
- ❍ 15 முதல் 29 மணித்தியாலங்கள்
- ❍ 30 முதல் 59 மணித்தியாலங்கள்
- ❍ 60 மணித்தியாலங்கள் அல்லது அதற்கும் அதிகம்

(இ) முதியவர் ஒருவரை அல்லது பலரை **வருவாய் பெறாது** பராமரித்தல் அல்லது உதவுதல

*சில எடுத்துக்காட்டுகள்: முதிய குடும்பத்தவர் ஒருவரைப் பராமரித்தல், முதியவரைச் சந்தித்தல், அவர்களுடன் தொலைபேசியில் உரையாடுதல், கடை, வங்கி, மருந்து விடயங்களில் உதவுதல் முதலியன.*

- ❍ பொருந்தாது
- ❍ 5 மணித்தியாலங்களிலும் குறைவு
- ❍ 5 முதல் 9 மணித்தியாலங்கள்
- ❍ 10 முதல் 19 மணித்தியாலங்கள்
- ❍ 20 மணித்தியாலங்கள் அல்லது அதற்கும் அதிகம்

## தொழில் துறை அலுவல்கள்

**34.** இவர் **கடந்த வாரம்** எத்தனை மணித்தியாலங்கள் வருவாய் பெற்று வேலை செய்தார் அல்லது சொந்த வேலை செய்தார்?

*இவர் கடந்த வாரம் எல்லா வேலைகளிலும் மொத்தமாக எத்தனை மணித்தியாலங்கள் வருவாய் பெற்று வேலை செய்தார் அல்லது சொந்த வேலை செய்தார் என்பதைக் குறிப்பிடவும். உள்ளடக்கவும்:*

- *கூலி, வேதனம், கையூட்டு, தரகு பெற்றுச் செய்த வேலை;*
- *தனது சொந்த தொழிலகத்தில், பண்ணையில் செய்த வேலை அல்லது தனித்தோ சேர்ந்தோ புரிந்த வாழ்க்கைத் தொழில்;*
- *முறையான சம்பள ஏற்பாடின்றி ஒரு குடும்பப் பண்ணையை அல்லது தொழிலை இயக்குவதில் நேர்முகமாக ஈடுபட்டமை.*

மணித்தியாலங்களின் எண்ணிக்கை (கிட்டிய மணித்தியாலத்தில்)

________________ ➔ **40-ம் வினாவுக்கு செல்க**

**அல்லது**

❍ பொருந்தாது ➔ **அடுத்த வினாவுக்குச் செல்லவும்**

---

**35.** இவர் **கடந்த வாரம்** தனது வேலையிலிருந்து அல்லது தொழிலகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டாரா அல்லது வேலைக்குச் செல்லாதிருந்தாரா?

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக.*

❍ இல்லை
❍ ஆம், ஒரு வேலையிலிருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டார். அதற்கு மீளும் நம்பிக்கை உண்டு.
❍ ஆம், விடுமுறை, சுகயீனம், வேலைநிறுத்தம், வேலைமறுப்பு, அல்லது வேறு காரணங்களுக்காக வேலைக்குச் செல்லவில்லை

---

**36.** அடுத்த நான்கு வாரங்களுள் ஒரு புதிய வேலையைத் தொடங்குவதற்கு இவர் **கடந்த வாரம்** திட்டவட்டமான ஏற்பாடு செய்திருந்தாரா?

❍ இல்லை
❍ ஆம

---

**37.** இவர் **கடந்த நான்கு வாரங்களில்** சமபள வேலை தேடித் திரிந்தாரா?

*எடுத்துக்காட்டாக, இவர் ஒரு தொழில் முகவர் நிலையத்துடன் தொடர்புகொண்டாரா, தொழிலதிபர்களிடம் கேட்டுப் பார்த்தாரா, பத்திரிகைகளில் விளம்பரம் செய்தாரா, விளம்பரங்களுக்குப் பதில் அனுப்பினாரா?*

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக*

❍ இல்லை ➔ **39-ம் வினாவுக்கு செல்க**
❍ ஆம், முழு நேர வேலை தேடினார
❍ ஆம், பகுதி நேர வேலை (கிழமைக்கு 30 மணித்தியாலங்களிலும் குறைவாக) தேடினார

---

**38.** இவருக்கு **கடந்த வாரம்** ஒரு வேலை கிடைத்திருந்தால் செய்யத் தொடங்கியிருப்பாரா?

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக.*

- ❍ ஆம், தொடங்கியிருப்பார்
- ❍ இல்லை, ஏற்கெனவே வேலை உண்டு
- ❍ இல்லை, அப்பொழுது சுகயீனம் உற்றவராய் அல்லது இயலாதவராய் இருந்தார்
- ❍ இல்லை, சொந்த அல்லது குடும்ப பொறுப்புகளினால்
- ❍ இல்லை, பாடசாலை செல்வதால்
- ❍ இல்லை, வேறு காரணங்களினால்

---

**39.** இவர் கடைசியாக எப்பொழுது சம்பளத்துக்கு அல்லது சொந்த வேலை செய்தார்?

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக*

- ❍ 2006ல் ➔ **அடுத்த வினாவுக்குச் செல்லவும**
- ❍ 2005ல் ➔ **அடுத்த வினாவுக்குச் செல்லவும**
- ❍ 2005க்கு முன்னர ➔ **51-ம் வினாவுக்கு செல்க**
- ❍ செய்யவில்லை ➔ **51-ம் வினாவுக்கு செல்க**

---

***குறிப்பு: 40 முதல் 48 வரையான வினாக்கள், இவர் கடந்த வாரம் செய்த வேலை அல்லது மேற்கொண்ட தொழில் பற்றியவை.***

*இவர் கடந்த வாரம் வேலை செய்யாவிட்டால், 2005 ஜனவரி 1ம் திகதிக்குப் பின்னர் மிகவும் நீண்ட காலத்துக்குச் செய்த வேலையைக் குறித்து விடை தருக. இவர் கடந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகள் செய்திருந்தால், **ஆகக்கூடிய நேரம்** செய்த வேலையைக் குறித்து விடை தருக.*

**40.** இவர் எங்கே வேலை செய்தார்?

*சொந்தத் தொழில் செய்வோராயின், தொழிலமைப்பின் பெயரை இடுக. அந்தத் தொழிலுக்குப் பெயர் இல்லாவிட்டால், அந்த ஆளின் பெயரை இடுக.*

*பின்வருமாறு பிரித்தெழுதவும்.*

தொழிலமைப்பு, அரச அலுவலகம் போன்றவற்றின் பெயர்

**<u>A B C  C O N C R E T E  P R O D U C T S  L I M I T E D</u>**

தொழிலமைப்பு, அரச அலுவலகம் போன்றவற்றின் பெயர்

______________________________

______________________________

______________________________

______________________________

(பொருந்துமாயின்) பிரிவு, தொழிற் சாலை, திணைக்களம் போன்றவை

______________________________

______________________________

---

**41.** இது என்ன வகையான தொழில், உற்பத்தி, சேவை?

விபரம் தரவும். எடுத்துக்காட்டு:

- *புது வீடு கட்டுதல்*
- *ஆரம்ப பாடசாலை*
- *மாநகராட்சிக் காவல்துறை*
- *கோதுமைப் பண்ணை*
- *காலணிக் கடை*
- *உணவுப்பொருள் மொத்த விற்பனை*
- *கார் உதிரிப் பாக உற்பத்தி*

தொழில், உற்பத்தி, சேவை வகை

______________________________
______________________________
______________________________

---

**42.** இவருடைய வேலை அல்லது பதவி என்ன?

குறிப்பிடவும். எடுத்துக்காட்டு:

- *சட்டசேவைச் செயலாளர்*
- *குழாயமைப்பாளர்*
- *மீன்பிடி வழிகாட்டுநர்*
- *மரத் தளபாடம் இணைப்பவர்*
- *இரண்டாந்தரப் பாடசாலை ஆசிரியர்*

*(படையினராயின் பதவியைக் குறிப்பிடுக)*

பதவி

______________________________
______________________________
______________________________

---

**43.** இவர் இந்த வேலையில் செய்த முக்கிய காரியங்கள் எவை?

விபரம் தருக. எடுத்துக்காட்டுகள்:

- *சட்ட ஆவணங்கள் தயாரித்தார்*
- *வீடுவளவுகளில் குழாய் வேலை செய்தார்*
- *மீன்பிடியாளருக்கு வழிகாட்டினார்*
- *மரத் தளபாடம் செய்தார்*
- *கணிதவியல் கற்பித்தார்*

முக்கிய காரியங்கள்

______________________________
______________________________
______________________________

---

**44.** இவர் இந்த வேலையில் அல்லது தொழிலில் முக்கியமாக:

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக.*

- ❍ கூலி, வேதனம், கையூட்டு, தரகு பெற்று வேலை செய்தாரா? → **46-ம் வினாவுக்கு செல்க**
- ❍ குடும்ப பண்ணையில் அல்லது தொழிலகத்தில் தனது துணைவருக்கு அல்லது வேறு உறவினருக்கு சம்பளம் பெறாது வேலை செய்தாரா? → **46-ம் வினாவுக்கு செல்க**
- ❍ சம்பள ஆளுதவியின்றி, தனித்து அல்லது பங்காளியுடன் சேர்ந்து சொந்தத் தொழில் செய்தாரா?
- ❍ சம்பள ஆளுதவியுடன் தனித்து அல்லது பங்காளியுடன் சேர்ந்து சொந்தத் தொழில் செய்தாரா?

---

**45.** சொந்தத் தொழிலாயின், இவருடைய பண்ணை அல்லது தொழிலகம் ஒரு தாபனமாகச் சட்டபடி தாபிக்கப்பட்டுள்ளதா?

- ❍ இல்லை
- ❍ ஆம்

---

**46.** இவர் **வழக்கமாக** எந்த விலாசத்தில் **அதிக நேரம்** வேலை செய்தார்?

*எடுத்துக்காட்டு:* *365 Laurier Ave. West*

- *இலக்கம்* → *365*
- *பெயர்* → *Laurier*
- *வகை* → *Ave.*
- *திசை* → *West*

*வீதி விலாசத்தில் திசை (வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு) அடங்குமாயின், அதனை உள்ளடக்கவும்.*

*வீதி விலாசம் தெரியாவிட்டால் அல்லது அஞ்சல் அலுவலகப் பெட்டி விலாசம் என்றால், கட்டடத்தை அல்லது ஆகக் கிட்டிய சந்தியைக் குறிப்பிடவும். அஞ்சல் அலுவலகப் பெட்டி இலக்கத்தை இட வேண்டாம்.*

*மாநகரத்தை அல்லது நகரத்தை உள்ளடக்கிய பெருநகரத்தைக் காட்டிலும் அந்த மாநகரத்தின் அல்லது நகரத்தின் பெயரைக் குறிப்பிடுவதே சிறப்பு.*

*எடுத்துக்காட்டுகள்:*

- *விக்டோறியா (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் சானிச் என்பதே சிறப்பு;*
- *எட்மண்டன் (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் செயின்ற் அல்பேட் என்பதே சிறப்பு*
- *மொன்றியல் (பெருநகரப் பகுதி) என்பதைக் காட்டிலும் லவல் என்பதே சிறப்பு.*

*வேலைசெய்யும் விலாசம் வேலைக்கு அமர்த்தியவரின் விலாசத்திலிருந்து வேறுபட்டால், இவர் உண்மையில் வேலைசெய்யும் விலாசத்தை இடுக. (எ-கா: பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடசாலையின் விலாசத்தை இட வேண்டுமே ஒழிய பாடசாலைச் சபையின் விலாசத்தை இடலாகாது).*

- ❍ வீட்டில் (பண்ணையில்) வேலை செய்தார → **48-ம் வினாவுக்கு செல்க**
- ❍ கனடாவுக்கு வெளியே வேலை செய்தார → **48-ம் வினாவுக்கு செல்க**
- ❍ நிரந்தர வேலைத்தல விலாசம் இல்லை → **47-ம் வினாவுக்கு செல்க**
- ❍ கீழ்க்கண்ட விலாசத்தில் வேலை செய்தார்:

**முழு விலாசம் தருக**

வீதி விலாசம் (எடுத்துக்காட்டைப் பார்க்கவும்)

________________________________________

________________________________________

________________________________________

மாநகரம், நகரம், கிராமம், நகர், பட்டணம், இந்தியர் புகலிடம

________________________________________

________________________________________

மாகாணம்/ஆள்புலம்

________________________________________

அஞ்சல் குறியீடு

___________ ___________

---

**47.** இவர் **வழக்கமாக** எவ்வாறு வேலைக்குச் சென்றார்?

*இவர் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளில் சென்று வந்தவராயின்,* ***ஆகக்கூடிய தூரத்துக்குப் பாவித்த*** *முறையைக் காட்டுக*

- ❍ கார் அல்லது பார வண்டி அல்லது வான் - சாரதி
- ❍ கார் அல்லது பார வண்டி அல்லது வான் - பிரயாணி
- ❍ பொது போக்குவரத்து *(எ-கா: பேருந்து, நடுவீதிப் பேருந்து, புகையிரதம், சுரங்கப் புகையிரதம், கடற்கலம்)*
- ❍ நடந்து வேலைக்குச் சென்றார்
- ❍ சைக்கிள
- ❍ மோட்டார் சைக்கிள்
- ❍ வாடகைக் கார
- ❍ வேறு முறை

---

**48.** (அ) இவர் இந்த வேலையில் **அடிக்கடி** பாவித்த மொழி எது?

❍ ஆங்கிலம்

❍ பிரெஞ்சு

வேறு மொழி — *குறிப்பிடவும்.*

______________________________

(ஆ) இவர் இந்த வேலையில் **வழக்கமாக** வேறு மொழிகள் எவற்றையும் பாவித்தாரா,

❍ இல்லை

❍ ஆம், ஆங்கிலம

❍ ஆம், பிரெஞ்சு

ஆம், வேறு மொழிகள் - *குறிப்பிடவும்.*

______________________________

---

**49.** 2005ம் ஆண்டில் இவர் எத்தனை **கிழமைகள்** வேலை செய்தார்?

இவர் 2005ல் எல்லா வேலைகளிலும் மொத்தமாக எத்தனை வாரங்கள் வருவாய் பெற்று வேலை செய்தார் அல்லது சொந்த வேலை செய்தார் என்பதைக் குறிப்பிடவும்.

*இவர் பின்வரும் வேலைகளில் **ஈடுபட்ட கிழமைகளை** உள்ளடக்கவும்:*

- *சம்பளத்துடன் **விடுமுறை** அல்லது **சுகயீன விடுப்பு;***
- ***முழு நேர** வேலை அல்லது **பகுதி நேர** வேலை;*
- ***கூலி, வேதனம், கையூட்டு, தரகு** தரும் வேலை;*
- ***சொந்தத் தொழில்;***
- *முறையான சம்பள ஏற்பாடின்றி **குடும்பப் பண்ணையை** அல்லது **தொழிலகத்தை** நேரடியாக நிர்வகிக்கும் வேலை*

❍ பொருந்தாது ➔ **51-ம் வினாவுக்கு செல்க.**

**அல்லது**

__________________ ← வாரங்களின் எண்ணிக்கை

---

**50.** **பெரும்பாலான கிழமைகளில்** இவர் **முழு நேரமா, பகுதி நேரமா** வேலை செய்தார்?

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" புள்ளடி இடுக*

❍ முழு நேரம் (கிழமைக்கு 30 மணித்தி யாலங்கள் அல்லது அதற்கும் அதிகம்)

❍ பகுதி நேரம் (கிழமைக்கு 30 மணித்தி யாலங்களிலும் குறைவு)

---

## 2005ல் வருமானம

**51.** **52ம் வினாவுக்கு** விடையளிப்பதற்குப் பதிலாக, ஏற்கெனவே தமது வருமான வரிக் கோப்புகளில் காணப்படும் வருமான விபரங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை கனடா புள்ளிவிபரவியல் அலுவலகத்துக்கு வழங்குவதன் மூலம் ஒவ்வொருவரும் நேரத்தை மீதப்படுத்தலாம்.

- *2005 திசம்பர் 31ம் திகதி முடிவடையும் ஆண்டுக்கான வருமான வரி விபரத் திரட்டைச் சமர்ப்பித்தவர்களே இந்த முறையைத் தெரிவு செய்யலாம்.*
- *உங்கள் வருமான வரி விபரங்கள் புள்ளிவிபர நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என்பதைக் கவனிக்கவும்.*

ஏற்கெனவே, 2005 திசம்பர் 31ம் திகதி முடிவடையும் ஆண்டுக்கான தமது வருமான வரிக் கோப்புகளில் காணப்படும் வருமான விபரங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை இவர் கனடா புள்ளிவிபரவியல் அலுவலகத்துக்கு வழங்குகிறாரா?

❍ ஆம் → 1ம் ஆள் சம்மதிக்கிறார். **53-ம் வினாவுக்கு செல்க.**

❍ இல்லை → **52-ம் வினாவைத் தொடரவும்.**

---

**52.** 2005 திசம்பர் 31ல் முடிவடையும் ஆண்டில் இவர் பின்வருவனவற்றிலிருந்து எதாவது வருமானம் பெற்றாரா?

*எல்லாவற்றையும் குறித்து **"ஆம்" அல்லது "இல்லை" என்று விடை அளிக்கவும்.** ''ஆம்'' ஆயின், **தொகையையும் பதியவும்.** இழப்பாயின் ''இழப்பு'' என்றும் குறிப்பிடவும்.*

### சம்பள வேலை:

(அ) *கழிப்புகள் எவற்றுக்கும் முந்திய தரகு, சன்மானம், கையூட்டு, வரிவிதிப்புக்கு உள்ளாகக்கூடிய நன்மைகள், ஆராய்ச்சி மானியங்கள், ஆக்கப்பங்குகள் உட்பட்ட* **கூலி, வேதன வகைகள்.**

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

---

### சொந்தத் தொழில்:

(ஆ) *பண்ணை உதவித் திட்டத்துக்கு உட்பட்ட உதவிப்பணம், மானியம், சந்தைப்படுத்தல் சபையின் கொடுப்பனவு, மொத்தக் காப்புறுதி வருமதி உட்பட்ட* **தேறிய பண்ணை வருமானம்** *(செலவு தவிர்ந்த மொத்த வரவு)*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இழப்பு

❍ இல்லை

(இ) **தாபனமாக அமைக்கப்படாத தொழிலகம் மற்றும் புரியும் தொழில் மூலம்** பெற்ற **பண்ணை சாராத தேறிய வருமானம்** முதலியன *(செலவு கழிந்த மொத்த வரவு)*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இழப்பு

❍ இல்லை

---

## அரசு தரும் வருமானம்:

(ஈ) (மத்திய, மாகாண, ஆள்புல) *சிறுவர் நல உதவிப்படிகள், குடும்ப உதவிப்படிகள் போன்ற* **சிறுவர்** உதவிப்படிகள்.

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

(உ) *மத்திய அரசு தரும்* **முதுமைக் கால ஓய்வூதியம், உத்தரவாத குறைநிரப்பு வருமானம்** மாத்திரம் *(மாகாண அரசு தரும் குறைநிரப்பு வருமானத்தை (ஏ)யில் பதியவும்)*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

(ஊ) **கனடா** அல்லது **குயூபெக் ஓய்வூதியத் திட்ட** நலன்

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

(எ) **வேலைக் காப்புறுதி நலன்** *(வரி கழிக்குமுன் மொத்த நலன்)*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

(ஏ) **அரச அலுவலகங்கள்** தரும் **பிற வருமானம்.** *மாகாண வருமான குறைநிரப்பு நலன், மானியம், ஜி.எஸ்.ரி, கியூ.எஸ்.ரி., எச்.எஸ்.ரி சலுகை, மாகாண வரிச் சலுகை, தொழிலாளர் நட்டஈடு, படையினர் ஓய்வூதியம், சமூகநலக் கொடுப்பனவு முதலியவை.*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

---

## பிற வருமானம்:

(ஐ) **பங்கிலாபம்,** முறி, வைப்பு, சேமிப்புச் சான்றிதழ் மீதான **வட்டி,** *தேறிய ஆதன வாடகை, அடைமான வட்டி போன்ற* ***பிற முதலீட்டு வருமானம்.*** *ஊடைமை விற்ற இலாபத்தை/நட்டத்தை உள்ளடக்க வேண்டாம்.*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இழப்பு

❍ இல்லை

(ஒ) *ஆர்.ஆர்.எஸ்.பி., ஆர்.ஆர்.ஐ.எவ். உட்பட்ட* **ஓய்வுதியம், விலக்கீட்டு ஊதியம், ஆண்டுக் கொடை** முதலியன. *ஓய்வூதியத் திட்டத்திலிருந்து அல்லது ஆர்.ஆர்.எஸ்.பி.யிலிருந்து மீட்ட தொகைகளை உள்ளடக்க வேண்டாம்.*

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

(ஓ) *வாழ்க்கைப் படி, சிறுவர் உதவிப் படி, புலமைப்பரிசில் போன்ற* **பிற பண வருமானம**

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இல்லை

---

**2005ல் எல்லா வழிகளிலும் ஈட்டிய மொத்த வருமானம்**

❍ ஆம

↳ $ ___ _______ _______ .00

❍ இழப்பு

❍ இல்லை

---

**2005ல் ஈட்டிய வருமானம் குறித்து செலுத்திய (மத்திய, மாகாண, ஆள்புல) வருமான வரி**

▶ $ ___ _______ _______ .00

---

**பின்ரும் வினா 15 வயதுக்குக் குறைந்தவர்கள் உட்பட இங்கு வழக்கமாக வசித்துவரும் அனைவருக்கும் உரியது. நீங்கள் வேறு ஆட்கள் சார்பாக விடை அளிப்பவர் என்றால், அவர்கள் ஒவ்வொருவருடனும் கலந்துசாவவும்.**

**53.** உங்கள் புள்ளிவிபரங்கள் அந்தரங்கமாக வைக்கப்படுவதற்கு *புள்ளிவிபரவியல் சட்டம்* உத்தரவாதம் அளித்துள்ளது. நீங்கள் இந்த வினாவுக்கு ''ஆம்'' என்று விடையளித்தால் மாத்திரமே 2006ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணிப்பின் பின்னர் 92 ஆண்டுகள் கழித்து உங்கள் சொந்த விபரங்கள் வெளியிடப்படும். நீங்கள் ''இல்லை'' என்று விடையளித்தால் அல்லது விடையளிக்காது வெற்றிடமாய் விட்டால், உங்கள் சொந்த விபரங்கள் என்றுமே வெளியிடப்பட மாட்டா.

இருடைய 2006ம் ஆண்டுக்கான புள்ளிவிபரங்கள் 2098ல் (மக்கள் தொகை கணிப்பின் பின்னர் 92 ஆண்டுகள் கழித்து) வெளியிடப்படுவதற்கு இவர் சம்மதிக்கிறாரா?

- ❍ ஆம்
- ❍ இல்லை

**படி ஊ**

**இந்த அகம் தொடர்பாக வீ1 முதல் வீ8 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

*வெளியிலிருந்து அல்லது கட்டடதின் உள்ளே ஒரு பொது விறாந்தையிலிருந்து அல்லது படிக்கட்டிலிருந்து புகும் **சொந்த வாயிலுடன்** கூடிய தனி வசிப்பிடமே ஓர் **அகம்** ஆகும். வாயில் இன்னொருவரின் வசிப்பிடத்தின் ஊடாக அமைதலாகாது.*

**வீ1.** **இந்த அகத்துக்கு வாடகை, அடைமானம், வரி, மின் கட்டணம் முதலியவற்றைச் செலுத்துவது யார்?**

*ஒருவருக்கு மேற்பட்டோர் அவற்றைச் செலுத்தினால், பொருத்தமான வட்டங்கள் அனைத்திலும் "X" புள்ளடி இடுக.*

- ❍ ஆள் 1
- ❍ ஆள் 2
- ❍ ஆள் 3
- ❍ ஆள் 4
- ❍ ஆள் 5
- ❍ இந்த அகத்துக்கான இன்னொரு வினாக் கொத்தில் பதியப்பட்ட ஒருவர்
- ❍ இங்கு வசிக்காத ஒருவர்

---

**வீ2.** **இந்த அகம்:**

*ஒரு வட்டத்துள் மாத்திரம் "X" இடுக.*

- ❍ உங்களுக்கு அல்லது இந்த அகத்தவர் எவர்க்கும் சொந்தமானதா? (இப்பொழுதும் அதற்குப் பணம் செலுத்தப்பட்டாலும் கூட)
- ❍ வாடகைக்கு விடப்பட்டுள்ளதா? (வாடகை காசாகச் செலுத்தாவிட்டாலும் கூட)

---

**வீ3.** (அ) **இந்த அகத்தில் எத்தனை அறைகள் உள்ளன?**

*சமையலறை, படுக்கை அறைகள், மாடங்கள், மேல் மட்டத்தில் அல்லது கீழ் மட்டத்தில் பூர்த்தியான அறைகள் முதலியவற்றை **உள்ளடக்கவும்.***

*முற்றிலும் தொழில் நோக்கங் களுக்குப் பாவிக்கப்படும் அறைகள் குளிய லறைகள், மாடங்கள், முகப்புக் கூடங்கள், என்பவற்றை **உள்ளடக்க வேண்டாம்.***

______ ← அறைகளின் எண்ணிக்கை

(ஆ) **இவற்றுள் படுக்கை அறைகள் எத்தனை?**

______ ← படுக்கை அறைகளின் எண்ணிக்கை

---

**வீ4.** **இந்த அகம் முதன்முதல் எப்பொழுது கட்டப்பட்டது?**

*கட்டடம் பூரத்தியாகிய ஆண்டைக் குறிப்பிடுக. பிற்பாடு அதனை மீளவடி வமைத்த அல்லது கட்டிச் சேர்த்த அல்லது மாற்றியமைத்த காலம் வேண்டாம். ஆண்டு தெரியாவிட்டால், அண்ணளவாகக் குறிப்பிடுக.*

- ❍ 1920 அல்லது முன்னர
- ❍ 1921-1945
- ❍ 1946-1960
- ❍ 1961-1970
- ❍ 1971-1980
- ❍ 1981-1985
- ❍ 1986-1990
- ❍ 1991-1995
- ❍ 1996-2000
- ❍ 2001-2006

---

**வீ5.** **இந்த அகம் பழுதுபார்க்கப்பட வேண்டி உள்ளதா?**

*மீளவடிவமைக்க அல்லது கட்டிச்சேர்க்க விரும்புபவற்றை உள்ளடக்க வேண்டாம்.*

- ❍ இல்லை, **வழமையான பேணலே** தேவை (வண்ணப் பூச்சு, உலை துப்புரவு செய்தல் முதலியன)
- ❍ ஆம், **சிறு பழுதுபார்ப்புகள்** தேவை (தரை ஓடுகள், செங்கற்கள், மர ஓடுகள் காணாமல் போதல் அல்லது இளகுதல், படிகள், கைப்பிடிகள் ஊறுபடல், வெளித்தகடுகள் முதலியன)
- ❍ ஆம், **பெரிய பழுதுபாரப்புகள்** தேவை (ஊறுபட்ட குழாய், மின்கம்பி இணைப்பு, மற்றும் சுவர், தரை, உட்கூரை முதலியவற்றின் பழுதுபார்ப்பு)

---

நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அகங்களை உடையவராய் அல்லது வாடகைக்கு எடுத்தவராய் இருப்பினும், நீங்கள் **தற்பொழுது** வசிக்கும் அகம் தொடர்பாக **வீ 6** முதல் **வீ8** வரையான வினாக்களுக்கு விடை தருக. சரியான தொகை தெரியாவிட்டால், அண்ணளவாகக் குறிப்பிடுக.

**குறிப்பு:**நீங்கள் அல்லது இந்த அகத்தவர் எவரும், நீங்கள் அல்லது அவர்கள் இயக்கும் பண்ணையிலேயே வசித்தால், இங்கே **குறிக்கவும** ➜ ❍ அப்புறம் அடுத்த பக்கத்தில் **படி எ**-க்குச் செல்லவும்.

**வீ6.** **இந்த அகத்துக்கான <u>வருடாந்த</u> (கடந்த 12 மாத) கொடுப்பனவுகள் யாவை?:**

(அ) மின்சாரம்?

❍ பொருந்தாது
❍ வாடகையுடன் அல்லது பிற கொடுப்பனவு களுடன் சேர்க்கப் பட்டுள்ளது

**<u>அல்லது</u>** $ ______ ________ .00 ஓராண்டுக்கு

(ஆ) எண்ணெய், வாயு, நிலக்கரி, விறகு மற்றும் பிற எரிபொருட்கள்

❍ பொருந்தாது
❍ வாடகையுடன் அல்லது பிற கொடுப்பனவு களுடன் சேர்க்கப் பட்டுள்ளது

**<u>அல்லது</u>** $ ______ ________ .00 ஓராண்டுக்கு

(இ) நீர் மற்றும் பிற மாநகராட்சிச் சேவைகள

❍ பொருந்தாது
❍ வாடகையுடன் அல்லது பிற கொடுப்பனவு களுடன் சேர்க்கப் பட்டுள்ளது

**<u>அல்லது</u>** $ ______ ________ .00 ஓராண்டுக்கு

---

**வீ7.** **வாடகையாளர்க்கு மாத்திரம்:**

இந்த அகத்துக்கு செலுத்தப்படும் **மாத வாடகை** எவ்வளவு?

❍ காசாக வாடகை செலுத்தாது எடுக்கப்பட்டது

**<u>அல்லது</u>** $ ______ ________ .00 ஒரு மாத்துக்கு

---

**வீ8. உடைமையாளர்க்கு மாத்திரம்: பாகங்கள் (அ) முதல் (ஊ) வரை விடை தருக.**

(அ) இந்த அகத்துக்குரிய வழமையான மொத்த **மாத** அடைமானம் அல்லது கடன் கொடுப்பனவு என்ன?

❍ பொருந்தாது → **பாகம் (இ)க்குச் செல்க**

**அல்லது** $ ________ __________ .00 ஒரு மாத்துக்கு

(ஆ) பாகம் (அ)வில் காட்டிய தொகையில் (மாநகர, பாடசாலை) உடைமை வரிகள் சேர்க்கப்பட்டுள்ளனவா?

❍ ஆம → **பாகம் (ஈ)க்குச் செல்க**
❍ இல்லை

(இ) இந்த அகத்துக்கென **ஓராண்டுக்கு** மதிக்கப்படும் உடைமை (மாநகர, பாடசாலை) வரி என்ன?

❍ பொருந்தாது

**அல்லது** $ ________ __________ .00 ஓராண்டுக்கு

(ஈ) தற்பொழுது நீங்கள் இந்த அகத்தை விற்பதாயின், எவ்வளவு தொகைக்கு விற்கலாம் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

**$** ______ __________ __________ .00

(உ) இது ஒரு பதிவுசெய்யப்பட்ட கொண்டோமினியத்தின் பாகமா?

❍ ஆம் → **பாகம் (ஊ)வுக்குச் செல்க**
❍ இல்லை → **அடுத்த பக்கத்தில் படி எ-க்குச் செல்க**

(ஊ) கொண்டோமினியத்தின் **மாதக்** கட்டணம் எவ்வளவு?

❍ பொருந்தாது

அல்லது $ ________ __________ .00 ஒரு மாத்துக்கு

---

**படி எ**

**நீங்கள் உங்கள் வினாக்கொத்தை நிரப்பிவிட்டீர்கள். இன்றே அனுப்பி வைக்கவும்.**

---

# பாகம் 2

# கேள்வி கேட்கும் காரணங்கள்

# கேள்வி கேட்கும் காரணங்கள்

## படி - அ

நீங்கள் உங்கள் வினாக்கொத்தில் உள்ளடக்க மறக்கும் விபரத்தை நாடியே உங்கள் தொலைபேசி இலக்கத்தைப் பாவித்து உங்களை அழைப்போம்.

நாங்கள் ஒவ்வொரு வதிவிடத்தையும் தவறாது கணக்கெடுப்பதற்காகவே உங்கள் விலாசத்தைக் கேட்கிறோம். வினாக் கொத்தின் வெளிப் பக்கத்தில் அச்சிட்ட விலாசம் காணப்படாவிட்டால் அல்லது நீங்கள் 2006 மே 16ம் திகதி வசித்த விலாசமும், வினாக்கொத்தின் வெளிப் பக்கத்தில் அச்சிட்ட விலாசமும் வெவ்வேறானவை என்றால் மாத்திரமே உங்கள் விலாசத்தை இட்டு நிரப்பவும்.

அச்சிட்ட விலாசத்தில் வழு இருந்தால் (வீதியின் பெயரில் அல்லது வகையில் அச்சுப் பிழை இருந்தால்) மறுமொழி தரும் கூறிலோ அச்சிட்ட விலாசக் கூறிலோ உங்கள் விலாசத்தை நீங்கள் திருத்த வேண்டியதில்லை.

மக்கள் தொகை கணித்த பின்னர் இடம் பெறக்கூடிய ஆய்வுகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கமும் விலாசமும் பயன்படுத்தப்படலாம்.

## படி – ஆ, படி-இ

உங்கள் வினாக்கொத்தில் யாரை உள்ளடக்க **வேண்டும்,** யாரை உள்ளடக்கக் **கூடாது** என்பவற்றை முடிவுசெய்வதற்கு இப்படிகள் உங்களுக்கு உதவும். நாங்கள் கணக்கெடுக்க வேண்டியோர் அனை வரையும் கணக்கெடுத்துவிட்டோம், எவரையும் இரண்டு தடவைகள் கணக்கெடுக்கவில்லை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு இவை எமக்கு உதவும். உங்கள் வினாக்கொத்தின் இரண்டாம் பக்கத்தில் உள்ள 1ம், 2ம், 3ம் அறிவுறுத்துரைகளை

## படி - ஈ

உங்கள் அகத்தில் வசிக்கும் எவரும் ஒரு பண்ணையை இயக்குபவரா என்பதை இது எமக்குத் தெரிவிக்கும். கமத்தொழில்களைக் கணிப்பதற்காக எல்லாப் பண்ணைகளும் கணக்கெடுக்கப்படுவதையும் இது உறுதிப்படுத்தும்.

## படி – உ

**4ம் பக்கத்தின் உச்சத்தில் உள்ள 1ம் வினாவுக்கு** விடையாக நீங்கள் ஏற்கெனவே படி ஆ-வில் இட்ட பெயர்களை அப்படியே இக்கூடுகளுக்குள் பிரித்தெழுதவும். பெயர்களை அதே ஒழுங்கில் இடவும். உங்கள் அகத்தவர்கள் குறித்து அளிக்கப்படும் தரவுகள் நீங்கள் சுட்டிக்காட்டிய பெயர்களுக்குரிய ஆட்களைப் பற்றியதாக அமைவது முக்கியம். 5 அல்லது அதற்கும் குறைந்த ஆட்களைக் கொண்ட அகத்தைக் குறித்தே இவ்வினாக்கொத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்கள் அகத்தவர்கள் 5 பேருக்கும் அதிகம் என்றால், உங்களுக்கு இரண்டாவது வினாக்கொத்து ஒன்று தேவைப்படும். மக்கள் தொகை கணிப்பு உதவிச் சேவையை அழைத்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கான இலவச தொலைபேசி இலக்கம்: 1 877 594-2006.

# வினாக்கள்

## மக்கள் தொகை — அடிப்படை விபரங்கள்

உங்கள் அகத்தில் வசிக்கும் எவரையும் தவறவிடக் கூடாது அல்லது இரண்டு தடவைகள் கணக்கெடுக்கக் கூடாது என்பதற்காகவே 1ம் வினாவில் அங்கு வசிக்கும் ஒவ்வொருவரின் பெயரும் கேட்கப்பட்டுள்ளது.

2 முதல் 6 வரையான வினாக்களில் ஒவ்வோர் அகத்திலும் வசிப்பவர்களைப் பற்றி வினவப்பட்டுள்ளது. இந்த வினாக்களின் மூலம் கனடாவில் வசிக்கும் மக்களின் வசிப்பிட வசதி, குடும்பத்தவர் தொகை, ஒரு பெற்றாருடன் அல்லது இரு பெற்றாருடன் வசிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை, தனித்து வசிப்பவர்களின் எண்ணிக்கை பற்றி எல்லாம் அறிய முடியும். முதியோர் காப்பு, சிறியோர் வரிச் சலுகை போன்ற சமூகநலத் திட்டங்களை வகுப்பதற்கும் இந்த விபரம் உதவும். நகரங்கள், மாநகரங்கள் என்பவை சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், முதியோர் அகங்கள் முதலியவற்றை அமைத்துப் பணிபுரிவதற்கும் இது உதவும்.

## அன்றாட உடலியக்கங்கள்

கனடாவில் உடல் நிலை, மன நிலை, உடல்நலப் பிரச்சனை காரணமாக உடலியக்கத்துக்குச் சிரமப்படுபவர்களின் எண்ணிக்கையை 7ம், 8ம் வினாக்களின் வாயிலாக அறியலாம். அவர்கள் அன்றாட வாழ்வில் மேற்கொண்டு எதிர்கொள்ளும் தடங்கல்களை அறிவதற்கு கனடா புள்ளிவிபர அலுவலகம் இப்பெறுபேறுகளைப் பயன்படுத்தும்.

## சமூக-பண்பாட்டு விபரம்

9 முதல் 21 வரையான வினாக்களின் வாயிலாக கனடிய மக்களின் சமூக, பண்பாட்டுச் சாயலை அறியலாம்.

கனடாவில் மக்கள் பிறந்த மாகாணம் அல்லது ஆள்புலம், அல்லது கனடாவுக்கு வெளியே பிறந்த நாடு பற்றி 9ம் வினாவில் கேட்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கனடாவின் உள்ளேயும், கனடாவுக்கும் பிற நாடுகளுக்கும் இடையேயும் மக்கள் இடம்பெயரும் விதம் தெரியவரும். அத்துடன் கனடிய மக்களின் பன்மைக் கோலமும் தெரியவரும்.

10ம் வினாவின் மூலம் கனடிய மக்களின் குடியுரிமை நிலை புலப்படும். இந்த விபரம் தேர்தல் திட்டம் தீட்டுவதற்கு உதவும். இந்த விபரத்தையும் வயது விபரத்தையும் சேர்த்து வாக்களிக்கும் வாய்ப்புடையோரின் எண்ணிக்கையைக் கணிக்கலாம். குடியுரிமை வகுப்புகள், பயிற்சிகள் முதலியவற்றைத் திட்டமிடுவதற்கும் இது உதவும்.

11ம், 12ம் வினாக்களின் வாயிலாக கனடாவில் வசிக்கும் குடிவரவாளர்கள், நிரந்தரமற்ற குடிவரவாளர்களின் எண்ணிக்கையையும், மக்கள் கனடாவினுள் புகுந்த ஆண்டையும் அறியலாம். இந்த வினாக்களின் வாயிலாகப் பெறப்படும் விபரங்களையும் பிற தரவுகளையும் கொண்டு காலந்தோறும் குடிவரவாளர்களின் சமூக, பண்பாட்டு நிலைவரங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஒப்புநோக்கலாம். குடிவரவு, வேலைவாய்ப்பு என்பன சம்பந்தமான கொள்கைகளையும் திட்டங்களையும் மீள்நோக்கலாம். கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளைத் திட்டமிடலாம்.

13 முதல் 16 வரையான வினாக்களின் மூலம் கிடைக்கும் விபரங்களைக் கொண்டு *கனடிய உரிமை-சுதந்திர சாசனத்துக்கு* அமையக் கனடிய மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய திட்டங்கள் வகுக்கப்படும். ஆங்கில அல்லது பிரெஞ்சு மொழிப் பயிற்சியும் சேவையும் தேவைப்படும் அளவைத் தீர்மானிப்பதற்கும் இந்த விபரம் உதவும்.

17ம் வினாவின் மூலம் கனடாவில் வசிக்கும் பல்வேறு இனங்களையும், சிறக்கும் பண்பாடுகளையும் அறியலாம். *பன்பண்பாட்டுச் சட்டத்தையும், கனடிய உரிமை-சுதந்திர சாசனத்தையும்* நிலைநாட்டுவதற்கு வேண்டிய விபரங்களைத் திரட்டுவதற்காக இவ்வினா உதவும். இனத்துவ, பண்பாட்டு, ஆராய்ச்சி அமைப்புகள், அலுவலகங்கள், ஆராய்ச்சியாளர்கள் சுகாதார மேம்பாடு, செய்தித்தொடர்பு, விற்பனைத் திட்டங்களைத் தீட்டுவதற்கு இவ்விபரங்கள் பயன்படும்.

18ம், 20ம், 21ம் வினாக்களின் வாயிலாகப் பழங்குடியினர் (வட அமெரிக்க இந்தியர், மெயிற்றியர், இனுவிற்றியர்) பற்றிய விபரங்கள் திரட்டப்படும். *இந்தியர் சட்டத்தையும், சம வேலைவாய்ப்புச் சட்டத்தையும்* நிலைநாட்டுவதற்கும் அவற்றுக்கு அமைய வேலைவாய்ப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் இவை பயன்படும். ஆராய்ச்சியாளர்களும் பழங்குடியினர் அரசுகளும் அமைப்புகளும் பல்வேறு சமூக, பொருளாதார விபரங்களை ஆராய்வதற்கும் இவை பயன்படும்.

19ம் வினாவின் வாயிலாகக் கனடாவில் வசிக்கும் கட்புலனாகும் சிறுபான்மை இனத்தவர் பற்றிய விபரம் கிடைக்கும். அனைவருக்கும் சம வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் *சம வேலைவாய்ப்புச் சட்டத்துக்கு* அமைய மேற்கொள்ளவேண்டிய திட்டங்களை வகுப்பதற்கு இது பயன்படும்.

## இடம்பெயர்வு

23ம், 24ம் வினாக்களின் மூலம் கனடாவில் வசிக்கும் மக்கள் கனடாவின் உள்ளேயும் வெளியேயும் இடம்பெயரும் விதத்தை அறியலாம். ஒரு மக்கள்தொகைக் கணிப்புக்கும் மறு மக்கள்தொகைக் கணிப்புக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நாட்டிலும் மாகாணங்களிலும் பிரதேசங்களிலும் வசிக்கும் மக்களின் தொகையை மதிப்பிடுவதற்கு இந்த விபரம் பயன்படும். வருங்காலத்தில் தேவைப்படும் வீட்டுவசதி, கல்வி வாய்ப்பு, போக்குவரத்து, சமூக சேவைகளை மதிப்பிடுவதற்கும், *நிதி ஒழுங்குச் சட்டத்துக்கு* அமைய வகுக்கப்படும் திட்டங்களை மேற்கொள்வதற்கும் இது பயன்படும்.

## பெற்றோர் பிறந்த இடம்

25ம் வினாவின் வாயிலாகக் கனடாவுக்கு வெளியே பிறந்த பெற்றோருக்கு கனடாவில் பிறந்த பிள்ளைகளின் எண்ணிக்கை தெரியவரும். கனடாவின் இரண்டாவது தலைமுறையினரின் சமூக, பொருளாதார நிலைவரங்களை மதிப்பிடுவதற்கும் இந்த விபரம் பயன்படும்.

## கல்வி

26 முதல் 32 வரையான வினாக்களின் மூலம் கனடாவில் வசிக்கும் மக்களின் கல்வி, பயிற்சி, திட்டவட்டமான தொழில் தேர்ச்சி என்பன தெரியவரும். பல்வேறு துறைகளில் வேண்டிய கல்வி அறிவு, பயிற்சி, தொழில் தேர்ச்சி வாய்ந்த தொழிலாளர்கள் போதியளவு உள்ளனரா என்பதை அரசினரும் தொழிலதிபரும் ஆராய்வதற்கு இந்த விபரம் பயன்படும். எமது தொழிலாளர்களின் மாறும் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் பயிற்சித் திட்டங்களை உருவாக்குவதற்கும் இது உதவும்.

32ம் வினாவின் மூலம் மாணவர் வரவு திரட்டப்படும். *கனடிய மாணவர் கடன் சட்டத்துக்கு* அமைய இரண்டாந்தரக் கல்வித் திட்டங்களையும் முதியோர் கல்வித் திட்டங்களையும் வகுத்து, நிதி வழங்குவதற்கு இந்த விபரம் தேவைப்படும். மாணவர்களைப் பாடசாலையில் நிலைநிற்கவோ பாடசாலைக்கு மீளவோ தூண்டும் திட்டங்களை உருவாக்குவதற்கும் இது உதவும்.

## வீட்டுக் காரியங்கள்

33ம் வினாவின் மூலம் மக்கள் வீட்டில் எவ்வளவு நேரம் வருவாயின்றிக் காரியம் புரிகிறார்கள் என்ற விபரம் தெரியவரும். இதனை வருவாய் தரும் வேலையுடன் ஒப்பிடுவதன் மூலம் கனடாவில் வசிக்கும் மக்கள் எவ்வாறு தமது வருவாய் தரும் வேலைகளையும் வருவாய் தராத வேலைகளையும் ஒருங்கே சமாளிக்கிறார்கள் என்பதைக் கண்டறியலாம்.

## தொழில் துறை

34 முதல் 50 வரையான வினாக்களின் மூலம் **15 வயது கொண்டவர்களும் அதற்கு மேற்பட்ட வயதினரும் வேலை செய்தும், சொந்த வேலை செய்தும்** சம்பாதிக்கும் விபரம் கிடைக்கும். தொழிலதிபர்களும் அரசினரும் கல்வி, பயிற்சித் திட்டங்களை வகுப்பதற்கும், மொழிப் பாவனையை மதிப்பிடுவதற்கும், வருங்கால வேலைவாய்ப்புகளைக் கணிப்பதற்கும், போக்குவரத்துத் திட்டங்களைத் திறம்பட வகுப்பதற்கும், நாடு முழுவதும் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த விபரம் பயன்படும்.

## 2005ல் வருமானம்

51ம, 52ம் வினாக்களின் மூலம் கனடாவில் வசிக்கும் மக்கள் அனைவரதும் விரிவான வருமான விபரங்களும், அவர்களுடைய குடும்ப, வீட்டு விபரங்களும் கிடைக்கும். வருமான வரிப் பதிவேடுகளில் அனைத்து மக்களையும், வருமானம் சம்பாதிப்பவர்களையும் பற்றிய முக்கிய விபரங்கள் கிடையா.

முதியோர் காப்பு ஓய்வூதியம், மாகாண வருமான குறைநிரப்புக் கொடுப்பனவு, சமூக உதவிக் கொடுப்பனவு, சமூகநலக் கொடுப்பனவு போன்ற வருமான உதவித் திட்டங்களையும் சமூக சேவைகளையும் உருவாக்குவதற்காகவே வருமானப் புள்ளிவிபரத்தை அரசுகள் பயன் படுத்துகின்றன. குடும்ப வருமான குறைநிரப்புத் திட்டங்களைத் திறம்பட மேற்கொள்வதற்கும் அவை ஏதுவாய் அமையும். சம்பள சமத்துவம், வீடமைப்புத் திட்டங்கள் போன்ற பிற திட்டங்களை மதிப்பிடுவதற்கும், அத்தகைய உதவித் திட்டங்கள் எங்கெங்கே தேவைப்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்கும் அவை உதவும்.

ஏற்ற நுகர்வோர் வாழும் அயல்களில் சில்லறை, மொத்த விற்பனை நிலையங்களை அமைப்பதற்கும், பொருட்களுக்கும் சேவைகளுக்கும் இருக்கக்கூடிய கிராக்கியை நிச்சயிப்பதற்கும் தொழிலகங்கள் வருமான விபரங்களைப் பயன் படுத்துகின்றன.

தொழிற் சங்கங்களும் தொழிலகங்களும் கூலி உடன்படிக்கைகளைப் பேசித் தீர்ப்பதற்கும், நட்டஈட்டுக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கும் பதவிப் பிரிவு வாரியான வருமான விபரங்களைப் பயன்படுத்துகின்றன.

சமூகநல உதவி நாடும் கனடியர்கள் சார்பாக இயங்கும் அமைப்புகள் மக்கள் தொகை கணிப்பு மூலம் கிடைக்கும் வருமான விபரங்களை அடிப்படையாகக் கொண்டே தமது விடயங்களைக் கவனிக்கின்றன.

தனிப்பட்டவர்கள் இவ்வருமான விபரங்களைப் பயன்படுத்தி தமது சொந்த வருமானத்தை, தமது பதவிக்கும் பிரதேசத்துக்கும் அல்லது முழு நாட்டுக்குமான சராசரி வருமானத்துடன் ஒப்பிடலாம்.

**தனியாளுக்குரிய அல்லது இனங் காணத்தக்க விபரங்கள் என்றும் விற்கப்படவோ, விலாசப் பட்டியலில் சேர்க்கப்படவோ மாட்டா. கனடா அரசிறை அலுவலகம் உட்பட வேறு அரசாங்கத் திணைக்களங்கள் எவையும் மக்கள் தொகை கணிப்பின் மூலம் திரட்டப்படும் வருமான விபரங்களையோ மற்றும் பிற தனிப்பட்ட விபரங்களையோ பெற்றுக்கொள்ள மாட்டா. உங்கள் விடைகள் அனத்தும் அந்தரங்கமாகவே பேணப்படும். இதுவே சட்டம்.**

## மக்கள் தொகை கணிப்பு இடம்பெற்று 92 ஆண்டுகள் கழிந்த பின்னர் தனியாளுக்குரிய விபரங்களை வெளியிடல்

மக்கள் தொகை கணிப்பு மூலம் திரட்டப்படும் தனியாளுக்குரிய விபரங்களின் நிலை குறித்து விபரமறிந்து முடிபெடுக்கும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிடைப்பதற்கு 53ம் வினா வகை செய்கிறது. இவ்வினாவுக்கு ஒருவர் **ஆம்** என்று விடை அளித்தால் மாத்திரமே 2006ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணிப்பு மூலம் திரட்டப்படும் அவருடைய விபரங்கள் 92 ஆண்டுகள் கழித்து வெளியிடப்படும். 2006ல் கனடிய சமூகம் இருந்த நிலையை வருங்காலத் தலைமுறைகள் நன்கு புரிந்துகொள்வதற்கு அத்தகைய இணக்கம் உதவும்.

உங்கள் அகத்தவர் ஒவ்வொருவருடனும் கலந்துசாவி அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னரே இவ்வினாவுக்கு விடையளிக்கவும். ஒருவருடைய கருத்துக்கள் தெரியாவிட்டால், அவருக்குரிய வினாவுக்கு விடை அளிக்காது விட வேண்டும். சிறுவர்கள் சார்பாகப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் விடை அளிக்க வேண்டும்.

ஒருவர் தனது விடையை மாற்ற விரும்பினால் அல்லது விடையளிக்காது விட்ட வினாவுக்கு விடையளிக்க விரும்பினால், எழுத்தில் தொடர்புகொள்ளவும்: Coordinator, Access to Information and Privacy, Statistics Canada, 120 Parkdale Ave. Ottawa, ON, K1A 0T6.

## படி ஊ: வீடமைப்பு

வீ1 முதல் வீ8 வரையான வினாக்களின் மூலம் அரச திட்டமிடுநர்களுக்கும் வீடு கட்டி விற்கும் தரப்பினருக்கும் வீடமைப்புத் திட்டங்களைத் தீட்டுவதற்கு வேண்டிய விபரம் கிடைக்கும். *தேசிய வீடமைப்புச் சட்டத்துக்கும் கனடா அடைமான-வீடமைப்புக் கூட்டுத்தாபனச் சட்டத்துக்கும்* அமைய மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பலவற்றுக்கும் இந்த விபரம் தேவைப்படும்.

வீடுகளில் உள்ள அறைகள், படுக்கை அறைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை, வீடு கட்டும் செலவு, வீடுகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களை வைத்து வெவ்வேறு பிரதேசங்களிலும் வசிக்கும் குடும்பங்களின் பொருளாதார நிலைவரம் மதிப்பிடப்படும். மாகாண, மாநகராட்சி அரசுகள் இந்த விபரங்களை வைத்து வீடுகளினுள் காணப்படும் இடநெருக்கடியை மதிப்பிட்டு, அதனை நிவர்த்திப்பதற்கு ஏற்ற திட்டங்களை மேற்கொள்ளும்.

வதிவிடங்களின் பழமை, அவற்றைப் பழுதுபார்க்க வேண்டிய தேவை போன்ற விபரங்களைக் கொண்டு மாநகராட்சி மன்றங்கள் அயல் விருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும்.